கழக பொருளாளரும், முன்னாள் ஒன்றிய அமைச்சருமான டி.ஆர்.பாலு எம்.பி. அவர்களின் மனைவியும், தகவல் தொழில்நுட்ப அணி செயலாளரும், தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சருமான டி.ஆர்.பி.ராஜா அவர்களின் தாயாருமான திருமதி ரேணுகா தேவி அவர்கள் மறைவையொட்டி சென்னை தியாகராயர் நகரில் உள்ள இல்லத்திற்கு கழகத்துணைப் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி அவர்கள் நேரில் சென்று அம்மையாரின் உருவப்படத்திற்கு மாலை அணிவித்து ஆறுதல் கூறினார். அருகில் டி.ஆர்.பாலு எம்.பி, தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா மற்றும் பூச்சி முருகன் ஆகியோர் உள்ளனர்.

கழகப் பொருளாளரும், முன்னாள் ஒன்றிய அமைச்சருமான டி.ஆர்.பாலு எம்.பி. அவர்களின் மனைவியும், தகவல் தொழில்நுட்ப அணி செயலாளரும், தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சருமான டி.ஆர்.பி.ராஜா அவர்களின் தாயாருமான திருமதி ரேணுகா தேவி அவர்கள் மறைவையொட்டி சென்னை தியாகராயர் நகரில் உள்ள இல்லத்திற்கு இந்து என்.ராம் அவர்கள் நேரில் சென்று அம்மையாரின் உருவப்படத்திற்கு மாலை அணிவித்து ஆறுதல் கூறினார். அருகில் டி.ஆர்.பாலு எம்.பி, தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா மற்றும் பூச்சி முருகன் ஆகியோர் உள்ளனர்.

### நெல்லையில் விடுதலைப் போராட்ட வீரர்

# ஒண்டிவீரன் 254 வது நினைவு தினம் - சிலைக்கு மாலை!

### சட்டமன்ற பேரவைத்தலைவர் மு.அப்பாவு,அமைச்சர் டாக்டர்.மா. மதிவேந்தன்– அந்தியூர் செல்வராஜ் எம்.பி, அணிவித்து மரியாதை!

நெல்லை.ஆக.22-

நெல்லை மாவட்டம் விடுதலைப் போராட்ட வீரர் ஒண்டிவீரன் அவர்களின் 254வது நினைவு தினத்தை முன்னிட்டு 20.08.2025 யஅன்று பாளையங்கோட்டையில் அமைந்துள்ள விடுதலைப் போராட்ட வீரர் ஒண்டிவீரன் அவர்களின் மணிமண்டபத்தில் தமிழ்நாடு அரசின் சார்பில் அன்னாரது திருவுருவச்சிலைக்கு மாலை அணிவிக்கும் நிகழ்வில் சட்டப் பேரவைத் தலைவர் மு.அப்பாவு, ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் டாக்டர். மா.மதிவேந்தன்,கழக துணை பொதுச் செயலாளர் அந்தியூர் செல்வராஜ் எம்.பி.ஆகியோர் பங்கேற்று தூய்மைப் பணியாளர்கள் நலவாரியத் தலைவர் டாக்டர் திப்பம்பட்டி வெ.ஆறுச்சாமி,மாவட்ட ஆட்சியர் மரு.இரா.சுகுமார், நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் பாளை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல்வஹாப், நெல்லை மாநகராட்சி மேயர் கோ.ராம கிருஷ்ணன், துணை மேயர் கே.ஆர்.ராஜஈ,கிறிஸ்தவ தேவாலயங்களில் பணியாற்றும் உபதேசியார்கள் மற்றும் பணியாளர்கள் நலவாரியத் தலைவர் விஜிலா சத்யானந்த் ஆகியோர் முன்னிலையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள்.

இந்நிகழ்வில் சட்டப் பேரவைத் தலைவர் மு.அப்பாவு தெரிவித்ததாவது.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, தமிழ்நாடு அரசின் சார்பில் இன்று நடைபெறும் ஒண்டிவீரன் நினைவு நாளில் விடுதலைப் போராட்ட வீரர் ஒண்டிவீரன் அவர்களின் திருவுருவச்சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டுள்ளது.

**பூலித்தேவனுக்கு முதன்மை படைத்தலைவராக இருந்தவர்!**

திருநெல்வேலி, தூத்துக்குடி,தென்காசி மாவட்டங்களில் சுதந்திரத்திற்காக போராடிய பாரதியார்,செக்கிழுத்த செம்மல் வ.உ.சிதம்பரனார், வீரபாண்டிய கட்டப்பொம்மன் ஆகிய மிகப்பெரிய தியாகிகள் வாழ்ந்து மறைந்த மண். குறிப்பாக, வெள்ளையரை எதிர்த்த வீரபாண்டிய கட்டபொம்மனின் தளபதிகளில் ஒருவராக சுந்தரலிங்கம் அவர்கள் இறுதியில் தன்னையே மாய்த்துக் கொண்ட வராலாறு ஒருபுறம் என்றால், மற்றொருபுறம் வீர பாண்டிய கட்டபொம்மனுக்கு முன்பே நெல்லை சீமையின் நெற்கட்டும் செவல் பாளையத்தில் மாவீரன் பூலிதேவன் வெள்ளையரை எதிர்த்து போரிட்டார்.வெள்ளையருக்கு எதிரான பல போர்களில் மாமன்னர் பூலிதேவனுக்கு முதன்மை படைத்தலைவராக இருந்தவர் மாவீரர் ஒண்டிவீரன் என்பவர் ஆவார்.ஆங்கிலேய படைகளை தனியாகச் சென்று அழித்தார்.ஒண்டியாக சென்று எதிரிகளை கொன்றதால் ஒண்டிவீரன் என அழைக்கப்பட்டார். இவர் பல போர்களில் வெற்றி கண்டுள்ளார்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பொற்கால ஆட்சியில் 2010ம் ஆண்டு திருநெல்வேலி மாவட்டத்தில் விடுதலைப் போராட்ட வீரர் ஒண்டிவீரன் அவர்களுக்கு நினைவு சின்னம் அமைக்கப்படும் என்று அரசு ஆணை வெளியிட்டு நிதி ஒதுக்கப்பட்டது.அதனைத் தொடர்ந்து 18.01.2011 அன்று மணிமண்டபம் கட்டுவதற்கான அடிக்கல் நாட்டப்பட்டது.இந்த மணிமண்டப வளாகத்தில் ரூ.51.78 இலட்சம் மதிப்பீட்டில் நூலக கட்டிடம் கட்டப்பட்டுள்ளது.இந்த நூலகத்தை முதலமைச்சர் அவர்கள் 08.09.2022 அன்று திறந்து வைத்தார்கள்.

**தியாகிகளுக்கு மணி மண்டபங்கள் - நினைவுச் சின்னங்கள் எழுப்பி பெருமை!**

சுதந்திரப் போராட்ட காலங்களில் பல சுதந்திர போராட்ட வீரர்கள் இங்கு உருவாகியுள்ளார்கள்.இந்த மண் வீரம் நிறைந்த மண். அவர்களுடைய சரித்திரம் எல்லாம் சுதந்திர போராட்ட வரலாற்றில் மறைக்க படாமல் இருப்பதற்காக முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பல்வேறு சுதந்திரப் போராட்ட வீரர்கள், தியாகிகளுக்கு நினைவு சின்னங்கள் உருவாக்கி சுதந்திர போராட்டங்களில் தமிழர்களாற்றிய பங்கினை எடுத்துகாட்டும் விதமாக அவர்களுக்கு மணிமண்டபங்கள், நினைவுச் சின்னங்கள் எழுப்பி, பெருமை சேர்த்துள்ளார்கள்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நல்வழியில் செயல்படும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களும் இந்திய விடுதலைக்காக பாடுபட்ட வீரர்கள், தியாகிகள், தமிழறிஞர்கள் போன்றோர்களை வருங்கால இளம் சந்ததியினர்கள் அறிந்து கொள்ளும் வகையில் அவர்களின் புகழ் பரப்புவதில் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்கள்.

மேலும் தாழ்மை நிலையிலுள்ள சமுகத்தை முன்னேற்ற வேண்டுமென்ற உயரிய நோக்கில் உள் ஒதுக்கீடாக 3 சதவீதம் இடஒதுக்கீடு வழங்கி பெருமை சேர்த்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்தான்.முதலமைச்சர் மு.க.ஸ்டா லின் அவர்கள் சமுதாய மக்கள் கூலி மற்றும் சில தொழில்களை மட்டும் செய்து கொண்டிருப்பதை மாற்றி அவர்களின் பொருளாதாரம் முன்னேற வேண்டுமென்றும், தொழிலதிபர்களாக மாற்ற வேண்டுமென பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்கள்.மேலும், தூய்மைப் பணியாளர்களை தொழிலதிபர்களாக மாற்ற வேண்டுமென்றும் மாநகராட்சி பகுதிகளில் அவர்களுக்கு தூய்மை பணியினை அவர்களே மேற்கொள்வதற்காக தேவையான வாகன வசதிகளையும் கொடுத்து, அவர்களின் பொருளாதாரம் முன்னேற்றம் அடைய வழிவகை செய்துள்ளார்.

**முத்தமிழறிஞர் கலைஞர் வழியில் முதல்வர் அரசு!**

மேலும் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி மாணவர்கள் உயர்படிப்பு படிப்பதற்கு வெளிநாட்டிற்குச் செல்ல வேண்டுமென்பதற்காக அம்பேத்கர் அயலக உயர்கல்வி உதவித்தொகை திட்டத்தினை உருவாக்கி கடந்த ஆண்டு மட்டும் 120 நபர்கள் அயல்நாட்டிற்குச் சென்று உயர்கல்வி பயில்வதற்கு பொறுப்பேற்று, அவர்களை படிக்க வைத்துக் கொண்டிருக்கிறார்கள். சமூக நீதி கிடைக்க வேண்டுமென்ற முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் வழியிலே முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அரசு தொடர்ந்து செயல்பட்டு வருகிறது.

இவ்வாறு சட்ட பேரவைத்தலைவர் மு.அப்பாவு தெரிவித்தார்.

நிகழ்வில் நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன், மாநில தொண்டரணி துணை செயலாளர் ஆவின் ஆறுமுகம்,மாநில விவசாய தொழிலாளரணி துணை செயலாளர் கணேஷ் குமார் ஆதித்தன்,நெல்லை மாநகர பொறுப்பாளர்கள் மேற்கு சுப்பிரமணியன், கிழக்கு தினேஷ், தலைமைச் செயற்குழு உறுப்பினர் சித்திக், பொதுக்குழு உறுப்பினர் பரமசிவம் ஐயப்பன்,கனகராஜ், பகுதி செயலாளர்கள் சுப்பிரமணியன் அண்டன் செல்லதுரை,நமச்சிவாயம் துபாய் சாகுல், பாளையங்கோட்டை மண்டல தலைவர் பிரான்சிஸ், மாமன்ற உறுப்பினர்கள் சகாய ஜூலியட் மேரி,வில்சன் மணித்துரை, ஜெகநாதன், களக்காடு நகர்மன்ற துணை த்தலைவர் பி.சி. ராஜன், மாவட்ட ஊராட்சி உறுப்பினர் கனகராஜ்,தகவல் தொழில் நுட்ப அணி காசிமணி, பொறியாளர் அணி சாய்பாபா மற்றும் கழகத்தினர்,அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### அஞ்சல்துறையின் நவீன மயமாக்கல் மற்றும்

# டிஜிட்டல் மயமாக்கல் வெறும் கண்துடைப்பு!

### ஒன்றிய அமைச்சரின் பதிலுக்கு கே.இ.பிரகாஷ் எம்.பி. அதிருப்தி!

புதுடெல்லி, ஆக.22-

அஞ்சல் துறையின் நவீனமயமாக்கல் மற்றும் டிஜிட்டல் மயமாக்கல் நடவடிக்கைகள் வெறும் கண்துடைப்பு என ஒன்றிய அமைச்சர் அளித்த பதில்களுக்கு கே.இ.பிரகாஷ் அதிருப்தி தெரிவித்துள்ளார்.

இது குறித்து கே.இ.பிரகாஷ் எம்.பி. கூறியிருப்பதாவது:-

ஒன்றிய அரசின் அஞ்சல் துறை நவீனமாக்கல் மற்றும் டிஜிட்டல்மயமாக்கல் எந்த அளவுக்கு இந்தியாவின் கிராமப்புற மக்களுக்கு பயனளித்துள்ளது என்பது குறித்து, இன்று நாடாளுமன்றத்தில் தொலைத்தொடர்பு துறை அமைச்சகத்திடம் கேள்வி எழுப்பினேன். ஏற்கனவே, இந்த அரசு கிராமப்புறங்களுக்கு வங்கிச்சேவைகளை போதுமான அளவுக்கு எடுத்துச் செல்ல வில்லை என்பது, நான் எழுப்பிய 2381 கேள்வி எண் மூலம் தெளிவாகியிருந்தது. இந்த நிலையில், தொலைத்தொடர்பு துறை குறித்த கேள்விகளை எழுப்பினேன்.

ஆனால், வழக்கம் போல தன்னுடைய தொழில்நுட்ப அலங்கார வார்த்தைகளால் நிரம்பிய பதில்களை அளித்து ஒன்றிய அரசு ஏமாற்றத்தை அளித்துள்ளது.

**புதிய மென்பொருள் அறிமுகம்; ஆனால், பணியாளர்களுக்கு பயிற்சியில்லை!** தொலைத்தொடர்பு மற்றும் ஊரக வளர்ச்சித் துறை இணை அமைச்சர் டாக்டர்.பெம்மசானி சந்திரசேகர் அளித்த பதிலில், DOP IT 2.0 என்ற திட்டம் 35,785 கோடி செலவில் தொடங்கப்பட்டிருப்பதாக சொல்லியிருக்கிறார். இதன் மூலம், அஞ்சல் மற்றும் நிதிச் சேவைகளை ஒருங்கிணைக்கப் போவதாக குறிப்பிடுகிறார். இதற்காக, 'Advanced Postal Technology (APT)' என்ற புதிய உள்நாட்டு மென்பொருளை 1.64 லட்சம் தபால் நிலையங்களில் பயன்படுத்தப் போவதாக சொல்கிறார்.

ஆனால், எதற்காக இந்த மென்பொருள் உருவாக்கப்பட்டது, இது எவ்வளவு சிறப்பாகச் செயல்படும் என்பதற்கான தகவல்கள் இல்லை. நாடு முழுவதும் பழைய மென்பொருளை நீக்கிவிட்டு, புதிய மென்பொருளை நிறுவுவதும் அவ்வளவு எளிதான காரியம் அல்ல. அதற்கான தொழில்நுட்ப பயிற்சி பணியாளர்களுக்கு அளிக்கப்பட்டுள்ளதா, அதில் ஏற்படும் தொழில்நுட்பக்கோளாறுகளை சரிசெய்ய திட்டங்கள் உள்ளதா என்பது குறித்த விவரங்கள் இல்லை.

அஞ்சல் அலுவலகங்களில், QR code பணப் பரிமாற்ற முறை அறிமுகப்படுத்தப்பட்டிருப்பதாக அமைச்சர் சொல்கிறார். இந்தியாவில் இதை எத்தனை கிராமப்புற மக்கள் உண்மையில் பயன்படுத்துகிறார்கள் என்பதைப் பற்றிய தகவல் இல்லை. QR Code பணப் பரிமாற்ற முறைக்கு விரைவில் கட்டணம் விதிக்கப்போவதாக செய்திகள் வரும் நிலையில், அதை தொலைத்தொடர்பு துறை எப்படி கையாளப்போகிறது என்பதற்கு விளக்கம் இல்லை. இந்த இரண்டுக்கும் பதில் இல்லாத வரை, இது வெறும் கண்துடைப்பு நடவடிக்கையே.

**ஆண்ட்ராய்ட் ஃபோன்கள் அளித்தால் மட்டும் போதுமா?**

கிராமப்புற கிளை அஞ்சல் அலுவலகங்களுக்கு ஆண்ட்ராய்ட் மொபைல் ஃபோன்கள் வழங்கப்பட்டிருப்பதாக அமைச்சர் சொல்கிறார். இந்த மொபைல்களில், அஞ்சல் துறையே உருவாக்கிய IMA (Internal Mobile App) செயலி மூலம், Digital signatures மற்றும் Instant delivery status updates

போன்ற பல வசதிகள் வழங்கப்படுவதாகச் சொல்கிறார்.

ஆனால், இந்தக் கருவிகளைப் பயன்படுத்தும் பணியாளர்களுக்கு போதுமான பயிற்சி அளிக்கப்பட்டுள்ளதா என்பது குறித்த முக்கியத் தகவல் இல்லை ஆய்வுகளின் படி, இந்தியாவின் கிராமப்புறங்கள் உள்ளிட்ட பல இடங்களில் இணையத் தொடர்பு தொடர்பான தொழில்நுட்பக் குறைபாடுகள் இருப்பது தெரியவந்துள்ளது. உட்புறம் இந்த குறைகளை சரி செய்யாமல், வெளிப்புறம் மொபைல் ஃபோன்களை அளிப்பதால் மட்டும் என்ன பயன்? இதற்கு ஒன்றிய அரசிடம் பதில் இல்லை.

**புதிய புதிய பெயர்களில் திட்டங்கள்; ஆனால், புகார்கள் குறையவில்லை**

அஞ்சல்துறையில் Core Banking Solution (CBS) கீழ் ATM facilities, Internet Banking, Mobile Banking போன்ற வசதிகள் அறிமுகப்படுத்தப்பட்டிருப்பதாக அமைச்சர் சொல்கிறார். ஆனால், இந்தச் சேவைகள் அனைத்தும் நகரங்களில் உள்ள மக்களுக்கு மட்டுமே பெரும்பாலும் பயன்படுகின்றன என்பது தெளிவு. இந்நிலையில், கிராமப்புறங்களில் உள்ள ஏழை, நடுத்தர மக்கள் இதை எந்த அளவுக்குப் பயன்படுத்துகிறார்கள், அப்படி பயன்படுத்தினால் அது குறித்த தரவுகள் எங்கே போன்ற கேள்விகளுக்கு விடையில்லை.

India Post Payments Bank (IPPB) சேவைகள் நாடு முழுவதும் 1.64 லட்சம் இடங்களில் கிடைப்பதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். இந்த இடங்களில் எல்லாம் Virtual

Debit Card, Post Office Savings Account linkage with IPPB accounts, online payment for Post Office Saving schemes, Aadhaar Enabled Payment System (AePS) உள்ளிட்ட பல திட்டங்கள் செயல்பாட்டில் இருப்பதாக அமைச்சர் தெரிவிக்கிறார். ஆனால், இதிலும் எத்தனை கிராமப்புறங்கள் பயன்பெறுகின்றன, அங்கெல்லாம் இது குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளதா?

மேலும், ஒன்றிய அரசு பெருமையாக குறிப்பிடும் ஆதார் மூலம் பணம் செலுத்தும் முறையான AePS போன்ற சேவைகளில் ஏற்படும் தொழில்நுட்பக் கோளாறுகள் மற்றும் பணப் பரிவர்த்தனை தோல்விகள் ஆகியவற்றை ஒன்றிய அரசு கணக்கில் எடுத்துள்ளதா என்றும் தகவல் இல்லை. எந்த சூழ்நிலையிலும் வாடிக்கையாளர்கள் தங்கள் பணத்தை இழக்காத வகையில், இதை மேம்படுத்த அவர்களிடம் என்ன செயல்திட்டம் உள்ளது என்பதும் தெரியவில்லை.

Mail and Parcel Optimization Project (MPOP) என்ற திட்டம் பார்சல் சேவைகளை நவீனப்படுத்தியதாகச் சொல்கிறார்கள். ஆனால், பார்சல்கள் சேதமடைவது, குறிப்பிட்ட நேரத்திற்குள் ஒப்படைக்கப்படாதது போன்ற புகார்கள் தொடர்ந்து வந்துகொண்டிருக்கின்றன. அனைத்து பார்சல்களும் கண்காணிக்கப்படும் அஞ்சல்களாக (accountable articles) மாற்றப்பட்டதாக ஒன்றிய அரசு சொன்னாலும், அந்த கண்காணிப்பு முறை எவ்வளவு துல்லியமாக செயல்படுகிறது? இந்தத் திட்டம் நடைமுறையில் என்ன முன்னேற்றத்தைக் கொண்டு வந்துள்ளது?

ஒட்டுமொத்தமாக பார்க்கையில், அஞ்சல் துறையின் நவீன மயமாக்கல் மற்றும் டிஜிட்டல் மயமாக்கல் நடவடிக்கைகள் வெறும் பெயரளவிலான திட்டங்களாக இல்லாமல், கிராமப்புற மக்கள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பு மக்களின் தேவைகளை உண்மையாக பூர்த்தி செய்யும் வகையில் இருக்க வேண்டும். அதற்கு, திட்டங்களை அறிவிப்பதோடு மட்டுமல்லாமல், சரியான கட்டமைப்பு வசதிகளையும், திட்டங்களின் செயல்பாட்டை கண்காணித்து மேம்படுத்தும் அமைப்பும் ஒன்றிய அரசு ஏற்படுத்த வேண்டும்.

அஞ்சல் துறை தான் கிராமப்புற மக்கள் பயன்படுத்தும் எல்லைக்குள் இருக்கும் முக்கியமான தொலைத்தொடர்பு மற்றும் வங்கி சேவை. அதில் ஒன்றிய அரசின் நிர்வாகப் பிழைகளுக்கு இடமிருக்கக்கூடாது.

இவ்வாறு கே.இ.பிரகாஷ் தெரிவித்துள்ளார்.


## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### க.சொ. கணேசன்
### ஆகஸ்ட் 22 (2005)

பள்ளிப்பருவத்திலிருந்தே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு, ஜெயங்கொண்டம் பகுதியிலே கழகத்தை வளர்த்த முன்னோடிகளில் ஒருவர் இவர்.

1967ஆம் ஆண்டு உடையார்பாளையம் வட்டக் கழகச் செயலாளராகவும், ஒன்றிய சீரணித் தலைவராகவும், 25 ஆண்டுகள் தொடர்ந்து ஒன்றியக் கழகச் செயலாளராகவும், தலைமைச் செயற்குழு உறுப்பினராகவும் கழகப் பணியாற்றியவர்.

1964ஆம் ஆண்டு இந்தி எதிர்ப்பு போராட்டத்திலும், கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

1986ஆம் ஆண்டு தா.பழூர் ஒன்றியப் பெருந்தலைவராகவும், 1989 மற்றும் 1996 ஆகிய இருமுறை ஜெயங்கொண்டம் சட்டமன்றத் தொகுதி கழக உறுப்பினராகவும், பணியாற்றி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

"களம் பல கண்டவனே, சிறை பல சென்றவனே, உளம் கவர் உரையாற்றிப் பேரவையில் வென்றவனே, குளம் என எமது கண்கள் நீர்நிறைய, கணப் பொழுதில் மறைய; மனம், ஏன் வந்ததோ ? எப்படித்தான் வந்ததோ–" என தலைவர் கலைஞர் அவர்கள் தனது இரங்கல் கவிதையில் குறிப்பிட்டுள்ளார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.



## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மே.சு. சண்முகசுந்தரம்
### ஆகஸ்ட் 22 (2021)

இளமைப் பருவத்திலேய கழகக் கொள்கையால் ஈர்க்கப்பட்டு, கழகம் துவக்கப்பட்ட காலத்திலிருந்தே பணியாற்றி வந்தவர்.

1950ஆம் ஆண்டு தான் பிறந்த ஊரில் கிளைக் கழகத்தை உருவாக்கி, அக்கிளைச் செயலாளராகவும், மதுராந்தகம் வட்ட முதல் செயலாளராகவும், நகர நெசவாளர் அணியிலும், இலக்கிய அணியிலும் பொறுப்பு வகித்தவர்.

அய்யன் திருவள்ளுவர் அறக்கட்டளையை உருவாக்கி, அதன்மூலம் மாணவர்களுக்கு பரிசு வழங்குதல், மக்களுக்கான மருத்துவ முகாம் போன்றவற்றை நடத்தியவர்.

இந்தி எதிர்ப்பு போராட்டம் உள்ளிட்ட பல்வேறு போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.